# 8

# நகைச்சுவைக் கதை (முல்லாக் கதை)

## சிறுவர் ஏமாந்தனர்

ஒரு சமயம் முல்லா நசுருதீன், தன் காலில் புதுச் செருப்புடன் வீதியில் வந்து கொண்டிருந்தார். அந்தச் செருப்பு அன்றுதான் வாங்கியது. அதனால் பளபளப்பாக இருந்தது.



ஒரு மரத்தடியில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் தூரத்தில் முல்லா வருவதையும், அவர் காலில் செருப்பு பளபளப்பதையும் பார்த்து விட்டனர்.

வயதானவர்களைக் கண்டால் சிறுவர்களுக்கு எப்போதும் கேலிதான். அது தவறு என்றாலும் கேட்கமாட்டார்கள்.

அப்படித்தான் அந்தச் சிறுவர்களும், முல்லாவிடம் தங்கள் திறனைக் காட்டி ஏமாற்ற விரும்பினர். முல்லா அணிந்திருக்கும் செருப்பை அபகரிக்க வேண்டும் என்பது அவர்கள் திட்டம்.

அதனால் முல்லா அருகில் வந்ததும் அவரைச் சூழ்ந்தனர். ‘‘என்ன குழந்தைகளே! மிகவும் சந்தோஷமாகக் காணப்படுகிறீர்கள்!’’ என்று கேட்டார்.

சிறுவர்களில் ஒருவன், ‘‘பெரியவரே! எங்களுக்குள் ஒரு போட்டி. இந்த மரத்தின் மீது யாராலும் ஏறமுடியாது என்று இவன் சொன்னான். ஆனால் முடியும் என்று கூறி நான் ஏற முயன்றேன். முடியவில்லை. அதனால் இந்த மரத்தின் மீது யாராலும் ஏறமுடியாது என்று நாங்கள் கூறுகிறோம். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?’’ என்றான்.

‘‘இது ஒரு பிரச்சினையே இல்லை. இதன் மீது ஏறாவிட்டால் யாருக்கும் நட்டமில்லை, இதை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்?’’ என்று முல்லா பதிலுரைத்தார்.

‘‘இது பிரச்சினை இல்லை பெரியவரே! எங்களில் ஒருவன் உங்களாலும் ஏறமுடியாது என்று சவால் விடுகிறான். நான் உங்களால் முடியும் என்று கூறுகிறேன். இவ்வளவு வயதும் அனுபவமும் உள்ள உங்களால் ஏறமுடியாதென்றால் எவ்வளவு கேவலம்? அதனால் நீங்கள் மரத்தின் மீது ஏறிக்காட்ட வேண்டும்’’ என்று தீர்மானமாகக் கூறினான்.

மரத்தின்மீது ஏறும்போது செருப்பைக் கழற்றுவார்; அப்போது எடுத்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் திட்டம்.

முல்லாவுக்கு அவர்களின் திட்டம் புரிந்துவிட்டது. அதனால், ‘‘அன்பார்ந்த சிறுவர்களே. நான் முடியாது என்றாலும் விடமாட்டீர்கள். எப்படியும் என்னை மரத்தின் மீது ஏறவைக்கத் தீர்மானித்துவிட்டீர்கள்.

சரி, ஏறுகிறேன் பாருங்கள்” என்று கூறிவிட்டு, தன் செருப்புகளைக் கழற்றித் தன் இடுப்பில் செருகிக் கொண்டார்.

சிறுவர்கள் திகைத்தனர்.

சிறுவர்கள் ஏமாந்தனர். இனியும் தங்கள் திறமை பலிக்காது என்ற எண்ணத்தில், “நீங்கள் மரம் ஏற வேண்டாம்! நாங்கள் விளையாடப் போகிறோம்” என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

**கெ. ஆறுமுகம்**
**அநுராகம்.**

## கிரகித்தற் பயிற்சி

### பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்

1. வீதியில் புதுச் செருப்புடன் சென்றவர் யார் ?
2. மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் யாவர் ?
3. வயதானவரின் பெயரென்ன ?
4. சிறுவன் குறிப்பிட்ட போட்டி என்ன ?
5. இறுதியில் ஏமாந்தது யார் ?

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **பளபளப்பு** | - | மினுமினுப்பு |
| **அபகரித்தல்** | - | கவருதல் |
| **சவால்** | - | அறைகூவல் |
| **அனுபவம்** | - | பட்டறிவு |
| **தீர்மானம்** | - | முடிவு |
| **திகைத்தல்** | - | மலைத்தல் |

## செயற்பாடு

ஆசிரியர் கூறும் கதையைக் கேளுங்கள். இக் கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள்

கதையை மௌனமாக வாசியுங்கள்.

முதல் மூன்று பந்திகளையும் உரத்து வாசியுங்கள்.

பொருத்தமான முடிக்கும் சொற்களைக் கொண்டு வாக்கியத்தை நிறைவுசெய்யுங்கள்.

1. முல்லா காலில் புதுச் செருப்புடன் வீதியில் ................................

2. சிறுவர் சிலர் ...................................................................

3. முல்லாவைச் சிறுவர்கள் ......................................................

3. நான் உங்களால் ஏறமுடியுமென்று ....................................

4. சிறுவர்கள் .......................................................................

நீங்கள் பார்த்து இரசித்த விளையாட்டுப் போட்டி அல்லது கலைவிழா பற்றி விபரியுங்கள்.

காற்புள்ளி (,) அரைப்புள்ளி (;) முக்காற்புள்ளி (:) முற்றுப்புள்ளி (.) என்பவற்றை அனுசரித்து வாசியுங்கள்.

இக் கதைகளை உணர்வுபூர்வமாக வாசியுங்கள். இது போன்று சிங்கள மொழியில் உள்ள அந்தரே கதையை வாசியுங்கள்.

**பின்வரும் கதாபாத்திரங்களின் குண இயல்பை எழுதுங்கள்.**

முல்லா, சிறுவர்கள்.

கதையிற் காணப்படும் படிப்பினைகளை எழுதுங்கள்.

## பெயர் எச்சமும் வினை எச்சமும்

### பெயர் எச்சம்

முற்றுப் பெறாத வினைச் சொல் பெயரைக் கொண்டு முடியுமாயின் அது பெயரெச்சம் எனப்படும்.

**உதாரணம்** : வந்த கமலா
வருகின்ற விமலா

**சரியான பெயர்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | கலைந்த | ஒலி |
| 2. | உடைந்த | சித்திரம் |
| 3. | வரைந்த | மின்னல் |
| 4. | ஒலித்த | மேகம் |
| 5. | மின்னிய | கண்ணாடி |

### வினை எச்சம்

முற்றுப் பெறாத வினைச் சொல் இன்னொரு வினைச் சொல்லைக் கொண்டு முடிந்தால், அது வினை எச்சம் எனப்படும்.

**உதாரணம்** : ஓடி வந்தான்.
பாடி ஆடினான்.

## செயற்பாடு

**கீழ்க் காணும் வாக்கியங்களில் வினை எச்சங்களின் கீழ்க் கீறிடுங்கள்.**

**உதாரணம்** : புத்தகத்தைத் தேடி எடுத்தான்.

1. பறவையைப் பார்த்து மகிழ்ந்தான்.
2. ஆபரணத்தை அணிந்து பார்த்தாள்.
3. கவிதையை எழுதி வாசித்தாள்.
4. நடந்து சென்றார்கள்.
5. பாடி ஆடினான்.

**கீழே தரப்பட்டுள்ள வினை எச்சங்களிலிருந்து பொருத்தமான வினை எச்சங்களைத் தெரிவு செய்து இடைவெளிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.**

துள்ளி, களைத்து, ஏறி, பறந்து, இருண்டு, கடந்து, போளாள்

**உதாரணம்** : வானம் கருமேகத்தால் ..........இருண்டு.......... காணப்பட்டது.

1. அவன் கடுமையாக உழைத்துக் ............................ போனான்.
2. அவள் விமானத்தில் இந்தியாவுக்குப் ............................
3. குழந்தை குதித்து ....................................
4. நிர்மலா வண்டியில் ............................... சென்றாள்.
5. ஆற்றைக் .............................. சென்றோம்.

## பெயர்ப் பலகை

**சில பெயர்ப் பலகைகளைப் பார்ப்போம்.**

1. கூட்டுறவுச் சங்கம்
2. விஜய வீதி
3. பிரதேச சபை
4. பிரதேச செயலகம்
5. மாநகர சபை
6. அஞ்சல் அலுவலகம்